21.07.2016

தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

## மண் இல்லாமல் செடி வளர்ப்பு: புதுச்சேரி விவசாயி சாதனை




புதுச்சேரி அடுக்க கூடப்பாக்கக்தில் உள்ள விவசாயி வெங்கடபதி வீட்டில், மண் இல்லாமல் தண்ணீரிலேயே வளர்க்கப்படும் செடிகள்.

மண் இல்லாமல் தண்ணீரிலேயே செடிகளை, ஹைட்ரோபோனிக் முறையில் விளைவித்து புதுச்சேரியைச் சேர்ந்த முன்னோடி விவசாயி சாதனை புரிந்துள்ளார்.

புதுச்சேரியை அடுத்த கூடப்பாக்கத்தைச் சேர்ந்தவர் டி.வெங்கடபதி. இவர், விவசாயத்தில் ஆராய்ச்சி செய்து, கனகாம்பரப்பூ செடிகளில் பல்வேறு ரகங்களை உருவாக்கி உள்ளார்.

இதற்காக நவீன தொழில்நுட்பங்களை கற்றுக் கொண்டு, அதனைச் செயல்படுத்துகிறார்.

இவரது சேவைக்காக முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், இவரை தில்லிக்கு வரவழைத்து பாராட்டியுள்ளார். மத்திய அரசு பத்மஸ்ரீ விருதும் வழங்கி உள்ளது.

ஏற்கெனவே, இவர் அணுக்கதிர் வீச்சு மூலம் செடிகளை உருவாக்கி வருகிறார். சுண்டக்காய் இனத்தைச் சேர்ந்த ஒரே செடியில் கத்தரி, மிளகாய், தக்காளி ஆகிய காய்கறிகளை விளைவித்துள்ளார்.

தண்ணீரில் செடி வளர்ப்பு: தற்போது அவர், மண் இல்லாமல் தண்ணீரிலேயே தாவரங்களை விளைவிக்கும் ஏஹ்க்ழ்ர்ல்ர்ய்ண்ஸ்ரீள் என்ற நவீன முறையில், வீட்டிலேயே செடிகளை வளர்த்து வருகிறார். குறிப்பாக அவரை, கத்தரி, கனகாம்பரம், சவுக்கு போன்ற உயர் ரக திசுக்கள் முறையிலான செடிகளை வளர்க்கிறார். ஹைட்ரோபோனிக் செடிகளின் சிறப்பு அம்சமே அவற்றுக்கு கிருமி தாக்குதலோ அல்லது தொற்று நோய்களோ ஏற்படாது என்பதாகும். இம்முறையிலான செடிகளின் வளர்ப்பு காலம் 3 மாதங்களே ஆகும்.

இதுகுறித்து முன்னோடி விவசாயியான டாக்டர் வெங்கடபதி கூறியது: ஹைட்ரோபோனிக் செடி வளர்ப்பு முறை, அமெரிக்காவில் அதிகளவில் நடைமுறையில் உள்ளது. நோய்த் தாக்குதலுக்கு ஆளாகாத செடிகளை விளைவித்து, அதன் விதைகளை விவசாயிகளுக்கு வழங்கலாம். பொதுமக்களுக்கு தரமான காய்கறிகள், கனிகளை இதன் மூலம் தரமுடியும்.

சாதாரண வகையில் விவசாயம் செய்தால், குறைந்தது மகசூல் ஈட்ட 6 மாதங்கள் ஆகும். ஆனால், ஹைட்ரோபோனிக் முறையில் செடிகளை 3 மாதத்திலேயே விளைவித்து அதிக மகசூலை ஈட்டலாம். குறைந்தது 32 டிகிரி சென்டிகிரேட் வெப்பத்தில் 12 மணி நேரம் இச்செடிகள் இருக்க வேண்டும். தண்ணீரில் பிஎச் அளவை அவ்வப்போது சரிபார்க்க வேண்டும்.

மேலும் பூமிக்கடியில் 60 அடி ஆழத்தில் கிடைக்கும் கனிமச் சத்துகளாலான மண், நீரை உறிஞ்சி வெளிப்படுத்தும் கற்களை உரமாக இட்டு இச்செடிகளை விளைவிக்கிறோம். இதனை பெரியளவில் செய்ய திட்டமிட்டுள்ளேன்.

ஹைட்ரோபோனிக் செடி வளர்ப்பைப் பிற விவசாயிகளுக்கு இலவசமாக கற்றுத்தரவும் ஆர்வமாக உள்ளேன் என்றார் வெங்கடபதி.

## ஆடிப் பட்ட விதைப்புக்கு மானிய விலையில் காய்கறி விதைகள்

தேனி மாவட்டத்தில் ஆடிப் பட்ட விதைப்புக்கு, தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் காய்கறி விதைகள் மானிய விலைக்கு விற்பனை செய்யப்பட உள்ளன.

இது குறித்து, மாவட்டத் தோட்டக் கலை துணை இயக்குநர் ஜெ. கிஷோர்குமார் கூறியது: காய்கறி உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில், தோட்டக் கலை உதவி இயக்குநர் அலுவலகங்களில் ஜூலை 25 ஆம் தேதி (திங்கள்கிழமை) முதல் ஆடிப் பட்ட விதைப்புக்கு அவரை, புடலை, பீர்க்கங்காய், பாகற்காய், முருங்கை, கீரை வகைகள் கொண்ட விதை பாக்கெட் ரூ. 10 மானிய விலையில் விற்பனை செய்யப்பட உள்ளன.

மேலும், அரசு தோட்டக்கலை பண்ணையில் குழித்தட்டு நாற்றாங்கல் முறையில் வளர்க்கப்பட்ட வீரிய ரக தக்காளி, கத்தரி, மிளகாய் நாற்றுகள், சின்ன வெங்காயம் விதை ஆகியன விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்படுகின்றன.

காய்கறி நாற்றுகள் பெற விரும்பும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட பகுதியில் உள்ள தோட்டக் கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில், தங்களது நிலத்தின் சிட்டா, அடங்கல், குடும்ப அட்டை ஆகியவற்றின் நகல்கள் மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவற்றை சமர்ப்பித்து முன்பதிவு செய்து கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு அழைப்பு

காங்கயம் வட்டத்துக்கு உள்பட்ட ஆதிதிராவிட விவசாயிகள் மானியத்தில் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்கலாம் என தோட்டக் கலைத் துறை தெரிவித்துள்ளது.

காங்கயம் வட்டத்துக்கு தோட்டக் கலைத் துறை சார்பில் பிரதமரின் விவசாயிகள் நீர்ப் பாசனத் திட்டம் 2015-16-ன்கீழ் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க குறு, சிறு ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது. இந்த மானியம் பெற

விண்ணப்பப் படிவத்துடன் கிராம நிர்வாக அலுவலர் சான்று, சிட்டா, அடங்கல், நிலத்தின் வரைபடம், குடும்ப அட்டை நகல், பாஸ்போர்ட் அளவுள்ள 3 புகைப்படம், மண், நீர் ஆய்வுச் சான்று, குறு,சிறு விவசாயி சான்று ஆகியவற்றுடன் காங்கயம் தோட்டக் கலை அலுவலகத்தை தொடர்பு கொண்டு முன்னுரிமைப் பதிவேட்டில் பதிவு செய்ய கொள்ள வேண்டும்.

சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க ஒரு விவசாயிக்கு அதிக பட்சமாக 12.5 ஏக்கர் வரை மானியம் அளிக்கப்படுகிறது என காங்கயம் தோட்டக் கலை உதவி இயக்குநர் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

## அமராவதி அணையில் தண்ணீர் திறப்பு: ஜெயலலிதா உத்தரவு

திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையில் இருந்து வியாழக்கிழமை (ஜூலை 21) முதல் தண்ணீரை திறந்துவிட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் புதன்கிழமை வெளியிட்ட உத்தரவு:

திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடக் கோரி, அமராவதி பழைய-புதிய ஆயக்கட்டு பாசன விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். வர்களது கோரிக்கையை ஏற்று, அமராவதி அணையில் இருந்து வியாழக்கிழமை முதல் தண்ணீர் திறந்துவிட உத்தரவிட்டுள்ளேன். இதனால், திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 32 ஆயிரத்து 770 ஏக்கர் நிலங்கள், பாசன வசதி பெறும் என்று தனது உத்தரவில் தெரிவித்துள்ளார்.

## அவிநாசியில் ரூ.38.60 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

அவிநாசியில் புதன்கிழமை ரூ.38.60 லட்சத்துக்குப் பருத்தி ஏலம் நடைபெற்றது.

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வாரந்தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. அதன்படி, புதன்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 1,996 பருத்தி மூட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தன.

இதில், ஆர்.சி.எச் ரகப் பருத்தி குவிண்டாலுக்கு ரூ.5,900 முதல் ரூ.6,410 வரையிலும், மட்ட ரகப் பருத்தி ரூ.1,400 முதல் ரூ.1,800 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ.38 லட்சத்து 60 ஆயிரத்துக்குப் பருத்தி வர்த்தகம் நடைபெற்றது. இந்த ஏலத்தில் பருத்தி வரத்து அதிகரித்திருந்தபோதிலும் குவிண்டாலுக்கு ரூ.400 குறைந்திருந்தது.

இந்த ஏலத்தில் பென்னாகரம், கிணத்துக்கடவு, கோபி, நம்பியூர், அன்னூர், திருப்பூர், பல்லடம், சேவூர், குன்னத்தூர், அவிநாசி, புளியம்பட்டி, மேட்டூர், அன்னூர் ஆகிய பகுதிகளிலிருந்து 187 பருத்தி விவசாயிகளும், கோவை, ஈரோடு பகுதியிலிருந்து 27 பருத்தி வியாபாரிகளும் கலந்து கொண்டனர்.

## ரூ. 1.05 கோடிக்கு கொப்பரை வர்த்தகம்

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 1 கோடியே 5 லட்சத்துக்கு புதன்கிழமை கொப்பரை ஏலம் நடைபெற்றது.

பெருந்துறை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள் 4,151 மூட்டைகளில் 2 லட்சத்து 5 ஆயிரம் கிலோ கொப்பரையை விற்பனைக்குக் கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 49.50-க்கும், அதிகபட்சமாக ரூ. 53.55-க்கும் விற்பனையானது. இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 33.20-க்கும், அதிகபட்சமாக ரூ. 48.30-க்கும் விற்பனையானது. இதில், ரூ. 1 கோடியே 5 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

## அதிக வேளாண் சாகுபடி தொழில்நுட்பத்துக்கு செல்லிடப்பேசி செயலியைப் பயன்படுத்தலாம்

அதிக வேளாண் சாகுபடி தொழில்நுட்பத்துக்கு செல்லிடப்பேசி செயலியை (கிஸான் ஆஃப் சுவிதா) பயன்படுத்தி பயனடையலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, நீலகிரி மாவட்ட வேளாண் வணிகத் துணை இயக்குநர் வீரமணி தெரிவித்துள்ளதாவது:

இந்திய விவசாயிகளின் நலன் கருதிப் பயிர் சாகுபடி தொடர்பான நவீன தொழில்நுட்பக் கருத்துகளைத் தெரிந்து கொள்ள செல்லிடப்பேசி செயலி (கிஸான் சுவிதா) அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதை ஆன்டிராய்ட் வகை செல்லிடப்பேசிகளில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளிலான இந்த செயலியை தமிழக அரசு வேளாண்மைத் துறை மூலமாகத் தமிழில் மொழி மாற்றம் செய்து விரைவில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த செயலி மூலமாக அடுத்த 5 நாள்களுக்கான பருவநிலை மாற்றம், புகைப்பட விளக்கத்துடன் பயிர்ப் பாதுகாப்பு மேலாண்மை முறைகள், உள்ளூர் மட்டுமின்றி பிற மாவட்டங்களிலும், பிற மாநிலங்களிலும் உள்ள வேளாண் விளைபொருள்களின் தினசரிச் சந்தை விலை நிலவரம் போன்றவற்றை தெரிந்து கொள்ளலாம்.

மேலும் விதை, உரம், பூச்சி மருந்து விற்பனையாளர்களின் செல்லிடப்பேசி எண்ணுடன் கூடிய முகவரி போன்ற விவரங்களையும் தெரிந்து கொள்ள முடியும். துறை சார்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களின் பெயர் அவர்களது செல்லிடப்பேசி எண்களுடன் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, விவசாயிகள் தாங்கள் இருக்குமிடத்திலிருந்தே தேசிய அளவில் மட்டுமின்றி, மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவிலான பருவநிலை, சந்தை நிலவரம், பயிர்ப் பாதுகாப்பு, வேளாண் ஆலோசனை, விற்பனையாளர்களின் முகவரி போன்ற விவரங்களைத் தெரிந்துகொண்டு பயனடையலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேட்டூர் நீர்த் தேக்கத்தில் 2.4 லட்சம் மீன் குஞ்சுகள் விடப்பட்டன

மேட்டூர் நீர்க்கேக்கக்கில் மீன்வளத்துறை சார்பில் 2.40 லட்சம் மீன் குஞ்சுகள் வளர்ப்பதற்காக விடப்பட்டன.

மேட்டூர் மீன் வளத்துறை சார்பில் மீன் விதைப் பண்ணையில் முதல் ரக மீன் குஞ்சுகள் செயற்கைக் கருவூட்டல் முறையில் உற்பத்தி செய்து நீர்த் தேக்கத்தில் விடப்படும். இந்த நிலையில் புதன்கிழமை மேட்டூர் மாசிலாபாளையம் நீர்க்கேக்கக்கில் 1.10 லட்சம் ரோகு மீன் குஞ்சுகளும், 1.30 லட்சம் கட்லா மீன்குஞ்சுகளும் விடப்பட்டன.

சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.செம்மலை, மேட்டூர் மீன்வளத் துறை உதவி இயக்குநர் சுப்பிரமணி, மீன்வளத்துறை ஆய்வாளர் கதிரேசன், நகர்மன்றத் தலைவர் லலிதாசரவணன், துணைத் தலைவர் ராமகிருஷ்ணன் மற்றும் மீனவர்கள் பங்கேற்றனர்.

இந்த மீன்குஞ்சுகள் 6 மாதங்களில் வளர்ந்து மீனவர்களுக்கு பலன் தரும் என மீன்வளத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## விவசாயிகளுக்கு துத்தநாக சல்பேட் வழங்கும் நிகழ்ச்சி

நாகை மாவட்டம், திருவிளையாட்டம் வேளாண் விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு துத்தநாக சல்பேட் வழங்கும் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், செம்பனார்கோயில் வேளாண்மை உதவி இயக்குநர் சோ. வெற்றிவேலன் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தது:

செம்பனார்கோயில் வட்டாரத்தில், தமிழக அரசின் வேளாண்மைத்துறை சார்பில் அறிவிக்கப்பட்ட விவசாயிகளுக்கான குறுவை தொகுப்புத் திட்ட நடைமுறைகள் பெரும்பாலான அளவில் முடிக்கப்பட்டுள்ளன. செம்பனார்கோயில் வட்டாரத்தில் சுமார் 5 ஆயிரம் ஏக்கரில் இயந்திரம் மூலம் நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த முறையில் நடவு செய்யும் விவசாயிகளுக்கான மானியத் தொகை அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும். இதன்படி, நடவு செய்த விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்கள் பெறப்பட்டு அலுவலர்கள் வயல் ஆய்வு செய்து உடனுக்குடன் விவசாயிகளின் வாங்கிக் கணக்கில் பணம் வரவு வைக்கப்பட்டு வருகிறது. இதுவரை சுமார் 1,050 ஏக்கருக்கான தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. துத்தநாக சல்பேட் 60 டன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரையில் 40 டன் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 20 டன் விடுமுறை நாள்களிலும் வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் விரைவாக வழங்கப்பட்டு வருகிறது. 4,400 ஏக்கருக்கு கொடுக்கும் வகையில் நெல் நுண்சத்து உரம் 28 மெட்ரிக் டன் கையிருப்பில் வைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

எச்டிபிஇ குழாய்கள் ஒரு யூனிட்டுக்கு 30 குழாய்கள் வீதம் 50 யூனிட்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளது. பயறு சாகுபடியை ஊக்குவிக்க ஒரு ஏக்கருக்கு விதைக்கு ரூ. 900, உழவுக்கு ரூ. 500 என மொத்தம் ரூ. 1,400 வழங்குவதற்கு செம்பனார்கோயில் வட்டாரத்தில் 400 ஏக்கர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, பெரும்பாலும் வழங்கப்பட்டுவிட்டது என்றார்.

இதில் வேளாண் அலுவலர் என். குமரன், துணை வேளாண் அலுவலர் ஆர். ரவிச்சந்திரன், உதவி வேளாண் அலுவலர்கள் எம். ரவிச்சந்திரன், ஜி. கலையரசன், க. ஜெயக்குமார், பிரபாகரன், உதயசூரியன், ஆத்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் திருமுருகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## கன்னியாகுமரிக்கு 1,200 டன் அரிசி

நீடாமங்கலத்திலிருந்து கன்னியாகுமரிக்கு 1,200 டன் பொது ரக அரிசி பொது விநியோகத் திட்டத்திற்காக சரக்கு ரயிலில் புதன்கிழமை அனுப்பி வைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கு, சுந்தரக்கோட்டை நவீன அரிசி ஆலை, மன்னார்குடி வட்டக்கிடங்கு ஆகியவற்றிலிருந்து 116 லாரிகளில் ஆயிரத்து 200 டன் பொதுரக அரிசி நீடாமங்கலம் ரயில் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டது. நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்கள் முன்னிலையில் அரிசி மூட்டைகள் பொது விநியோகத் திட்டத்திற்காக கன்னியாகுமரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தினமலர்

### இன்றைய வேளாண் செய்திகள்

## பயறு உற்பத்தி குறித்த பயிற்சி

ஓசூர்: ஓசூர் தாலுகா, அச்செட்டிப்பள்ளி பஞ்.,க்கு உட்பட்ட சூதாளம் கிராமத்தில், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 40 விவசாயிகளுக்கு, பயறு வகை உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்த பயிற்சி வகுப்பு நடந்தது. மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சபாநடேசன் பங்கேற்று, விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார். இப்பயிற்சி வகுப்பில், பயறு வகை பயிர்களுக்கான சாகுபடி குறித்த தொழிற்நுட்பங்கள், அறுவடைக்கு பின்பு கூடுதல் விலைக்கு சந்தைப்படுத்துதல் எப்படி என்பது குறித்த விளக்கங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மேலும் துவரை விதையுடன், உயிர் உரங்களான ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியாவை கலந்து விதை நேர்த்தி செய்வது குறித்து விளக்கப்பட்டது.

## விவசாயிகளுக்கு விலையில்லா மரப்பயிர் வழங்க ஏற்பாடு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், விவசாயிகளுக்கு விலையில்லா மரப்பயிர் வழங்கப்பட உள்ளதாக, கோட்ட வனவியல் விரிவாக்க அலுவலர் மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வனவியல் விரிவாக்க கோட்டத்தின் சார்பில், தமிழ்நாடு உயிர் பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டத்தின் கீழ், கிருஷ்ணகிரி, போச்சம்பள்ளி, ஊத்தங்கரை ஆகிய, மூன்று தாலுகாவில் உள்ள சிறு, குறு, பெரு விவசாயிகளின் பட்டா நிலங்களில், உயர் ரக மரக்கன்றுகள் நடவு செய்து கொடுக்கப்பட உள்ளது. விவசாயிகளுக்கு விரைவில் பலன் தரும், தேக்கு, ஈட்டி, சில்வர் ஓக், மலைவேம்பு, மகாகனி, வேம்பு, புளி, பாதாம், பலா, ஜம்புநாவம், காட்டு நெல்லி, முருங்கை போன்ற மரப்பயிர்கள் விலையில்லாமல், ஒரு ஏக்கருக்கு, 200 வீதம் அதிகபட்சமாக, 2,500 வரை நடவு செய்து கொடுக்கப்பட உள்ளது. எனவே இந்த வாய்ப்பை பயன்படுத்தி, மரம் நடவு செய்ய ஆர்வமுள்ள விவசாயிகள் அனைவரும், சம்பந்தப்பட்ட அலுவலர்களை தொடர்பு கொண்டு, உரிய ஆவணங்களை சமர்ப்பித்து பயன்பெறலாம். விலையில்லா மரப்பயிர்கள் பெற, பட்டா மற்றும் கணினி சிட்டா நகல் மற்றும் ரேஷன் கார்டு நகல், பாஸ்போர்ட் சைஸ் போட்டோ இரண்டும், வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல் ஒன்றும் ஆவணமாக சமர்பிக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## வேளாண் அறிவியல் நிலையத்தில் பல்வேறு ஒருநாள் பயிற்சிகள்

கோபி: கோபி வேளாண் அறிவியல் நிலையத்தில், பல்வேறு பயிற்சிகளுக்கு முன்பதிவு செய்ய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கோபி அருகே புதுவள்ளியம்பாளையத்தில், வேளாண் அறிவியல் நிலையம் இயங்கி வருகிறது. இதில் வரும், 26ம் தேதி காளான் உற்பத்தி தொழில்நுட்பம், 27ல் இயற்கை வழி விவசாய தொழில்நுட்பம், 28ல் வெள்ளாடு வளர்ப்பு குறித்த தொழில் நுட்ப பயிற்சிகள் நடக்கின்றன. பயிற்சிகளில் கலந்து கொள்ள விரும்புவோர், 04285 - 241626 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு மேலும் விவரங்கள் பெறலாம் என, வேளாண் அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி அழகேசன் தெரிவித்தார்.

## 'நெய் மிளகாய்' சுவையில் காரம் விற்பனை அதிகரிப்பால் 'இனிப்பு'

குன்னுார்: குன்னுார் சுற்றுப்புற கிராமங் களில், நெய் மிளகாய் சீசன் துவங்கி உள்ளது.

நீலகிரி, ஏற்காடு, மூணாறு போன்ற, மிதவெப்ப காலநிலை நிலவும் பகுதிகளில் 'நெய்மிளகாய்' அதிகளவில் விளைகிறது.

அதிக காரத்தன்மை கொண்ட இந்த மிளகாய்,'பூத் ஜலக்கியா' என்ற மிளகாயின் சாதனையை, கடந்த 2012ல், முறியடித்தது. அதன்பின், தற்போது வரையில், அதிக காரத்தன்மை மிள
காய் என்ற பெருமையை
பெற்றுள்ளது.

தற்போது, குன்னுார் சுற்றுப்புற பகுதிகளில் இதன் சீசன் துவங்கி உள்ளதால், கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஊட்டி உட்பட பிற மாவட்டங்களுக்கும் இந்த மிளகாய் விற்பனை செய்யப்படுகிறது.

கோடமலை சோலாடா மட்டம் விவசாயி வெள்ளையன்,76, கூறுகையில், "கடந்த, 43 ஆண்டுகளாக, நெய் மிளகாய் விளைவிக்கிறேன். முன்பு அளக்கரை பகுதியில் பயிரிட்டிருந்தேன். இந்த மிளகாயில் மருத்துவ குணம் உள்ளதால், வாயு தொல்லை, முதுகுவலிக்கு நிவாரணம் அளிப்பதாக கூறி, பலர் வாங்கி செல்கின்றனர். இதற்கு தற்போது, கிலோ,
100 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. இதன் விளைச்சலை அதிகரிக்க, தோட்டக்கலை துறையினர் உரிய நடவடிக்கை எடுத்தால், கூடுதல் லாபம் கிடைக்கும்," என்றார்.

## முடிக்கொத்து நோய் தாக்குதலால் அழிந்து வரும் மலைவாழை

தாண்டிக்குடி: தாண்டிக்குடி கீழ்மலைப்பகுதியில் முடிக்கொத்து நோய் தாக்குதலால் மலைவாழை விளைச்சல் சரிந்து
வருகிறது.

திண்டுக்கல் மாவட்டம் தாண்டிக்குடி கீழ் பழநி மலை, சிறுமலை பகுதியில் மட்டுமே மலைவாழை விளைச்சல் உள்ளது.

துவக்கத்தில் பழநி பஞ்சாமிர்த சுவைக்கு மெருகேற்றியது மலைவாழை தான். மருத்துவ குணம் கொண்ட இதற்கு எப்போதும் சந்தையில் கடும் கிராக்கி

நிலவுகிறது. மேலும் புவிசார் குறியீடு பெற்று தனக்கென சிறப்புகளை தக்க வைத்துள்ளது.

வாழையடி, வாழையாக இவ்வாழை பக்க கன்றுகள் மூலம் விருத்தியடைகின்றது. இந்நிலையில் இவ்வாழையில் முடிக்கொத்து நோய் தாக்குதல் தொடர்ந்ததால் மகசூல், உற்பத்தி குறைய தொடங்கின. மேலும் செந்தாளை பாதிப்பும் மலைவாழை உற்பத்தியை சரிய வைத்தது.

விவசாயிகளின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகித்த மலை வாழை, நோய் தாக்குதல் காரணமாக வீழ்ச்சியை சந்தித்து அவர்களை கவலைகொள்ளச் செய்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இப்பாதிப்பு நீடிக்கிறது.

தோட்டக்கலைத்துறையினர், விஞ்ஞானிகள் இதற்கு முழுமையான தீர்வு காணாமல் ஆலோசனைகளை மட்டுமே வழங்கி வருகின்றனர்.
இதனால் மருந்தின்றி விளையும் மலை வாழையில் முடிக்கொத்து நோய் முழுமையாக அழிக்க முடியாத நிலை உள்ளது. மலைவாழையை நோய் தாக்குதலில் இருந்து பாதுகாக்க தோட்டக்கலைத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## ஆடிப் பட்டத்தை பயன்படுத்த விவசாயிகள் தீவிரம்

வத்தலக்குண்டு: வத்தலக்குண்டு அருகே மானாவாரி நிலங்களில் விவசாயிகள் ஆடிப்பட்டத்தில் அவரை விவசாயம் செய்ய தீவிரம் காட்டி வருகின்றனர்.

விருவீடு, சந்தையூர், நடகோட்டை, விராலிமாயன்பட்டி, ரெங்கப்பநாயக்கன்பட்டி ஊராட்சியில் உள்ள உட்கடை கிராமங்களில் பெரும்பாலானாவை மானாவாரி நிலங்கள். இங்கு முருங்கை, சோளம், கம்பு உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. ஆடிப்பட்டத்தில் அவரை, புடலை போன்ற பந்தல் விவசாயத்தை ஆண்டு தோறும் செய்து வருகின்றனர்.
ஆடிப்பட்டத்தில் அவரை விதைத்து செப் முதல் நவம்பர் வரை பயிறை விளைவிப்பதில் விவசாயிகள் ஈடுபடுகின்றனர். நடவு செய்த 3ம் மாதம் அறுவடை செய்து விற்பனைக்கு சென்னை, பெங்களூருக்கு அனுப்பி வைக்கின்றனர். அப்பகுதி வியாபாரிகள் இப்பகுதியில் நேரடி கொள்முதல் செய்வதால் நல்ல விலை கிடைக்கிறது. தவிர 10 விவசாயிகள் ஒன்றாக சேர்ந்து சென்னையில் அவரையை விற்று லாபம் பார்க்கின்றனர். விவசாயிகளே நேரடி விற்பனையில் ஈடுபடுவதால் நல்ல லாபம் கிடைக்கிறது.

இது குறித்து ராஜதானிக்கோட்டை விவசாயி நாகராஜ் கூறியதாவது,“வானம் பார்க்க பூமியாக இருந்தாலும் விவசாயிகள் கடும் உழைப்பாளிகள். இதனால் விலைக்கு தண்ணீர் வாங்கி ஊற்றி சாகுபடி செய்து விடுவர். இப்பகுதி செழிப்பாக வேண்டும் என்றால் 58 கிராம கால்வாய் திட்டத்தை விரைவாக முடிக்க வேண்டும்” என்றார்.

## கொழுப்புச் சத்தை குறைக்கும் 'ஸ்டார் ப்ரூட்'

தாண்டிக்குடி: கொலஸ்ட்ராலை குறைக்கும் 'ஸ்டார் ப்ரூட்' பழங்கள் தடியன்குடிசையில்
அதிகளவு விளைச்சல் காண்கிறது.

தாண்டிக்குடி, தடியன்குடிசை, பூலத்துார் பகுதியில் ஸ்டார் ப்ரூட் விளைகிறது. இவற்றை ஐ விரலி, கரம்போலா எனவும் அழைப்பதுண்டு.

நார்ச்சத்து மிகுந்த இப்பழம் புளிப்பு, இனிப்பு சுவையை கொண்டது. இதில் அஸ்தாலிக், மாலிக் அமிலம், விட்டமின் ஏ நிறைந்துள்ளது. ஆண்டிற்கு இருமுறை பலனளிக்கும்.

மரத்திற்கு 300 கிலோ வரை காய்க்கும். மார்க்கெட்டில் ரூ.30 முதல் 50 வரை விற்கப்படுகிறது. கொலஸ்ட்ராலை கட்டுப்படுத்த, இப்பழத்தை டாக்டர்கள் சிபாரிசு செய்வது குறிப்பிடத்தக்கது.
தாண்டிக்குடி கீழ்மலைப்பகுதியில் விளைச்சல் காணும் இப்பழத்திற்கு வியபாரிகள் மத்தியில் ஏக கிராக்கி நிலவுகிறது. இனிப்பு சுவையான ஸ்டார் ப்ரூட் பழங்கள் தற்போது அதிக மகசூல் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## கொண்டை கடலை விலை அதிகரிப்பு

திண்டுக்கல்: திண்டுக்கல்லில் வரத்து குறைவால் வெள்ளை, கருப்பு கொண்டை கடலை விலை அதிகரித்துள்ளது.

திண்டுக்கல் மார்கெட்டிற்கு பிற மாவட்டங்கள், ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களிலிருந்து தினமும் 2 டன் கருப்பு, வெள்ளை கொண்டை கடலை விற்பனைக்கு வருகிறது.

கடந்த சில வாரங்களாக வரத்து குறைவால் பருப்பு, பயறு வகைகளின் விலைகள் இறங்கு மற்றும் ஏறுமுகமாக இருந்து வருகிறது. இதனால் கொண்டை கடலை விலையும் அதிகரித்துள்ளது. சென்ற மாதம் ஒரு கிலோ கொண்டை கடலை கருப்பு ரூ.60 க்கும், வெள்ளை ரூ.75 முதல் 90 க்கும் விற்றது. இந்நிலையில் நேற்று ஒரு

கிலோ கொண்டை கடலை கருப்பு ரூ.20 அதிகரித்து ரூ.80 முதல் ரூ90 க்கும், வெள்ளை ரூ.30 அதிகரித்து, ரூ.120 முதல் ரூ.135 வரையும் விற்பனையானது.

வியாபாரி மாணிக்கம் கூறுகையில்,"வெளி மாநிலங்களில் பருப்பு மற்றும் பயறு வகைகளின் சாகுபடி இல்லை. இதனால் வரத்து குறைந்து விலை அதிகரித்துள்ளது. மேலும், அதிகரிக்க வாய்ப்புள்ளது",என்றார்.

## வேளாண் அறிவியல் நிலையத்தில் இன்று இலவச பயிற்சி முகாம்

திண்டிவனம்: திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில், விதை உற்பத்தி பயிற்சி முகாம், இன்று நடக்கிறது.
திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ஷீபா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:

விதை உற்பத்தி செய்வதற்கான வழிமுறைகள், புதிய ரகங்களின் சிறப்புகள், உர மேலாண்மை மற்றும் பூச்சி நோய் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்துள்ளது.

இந்த பயிற்சி முகாம், திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில், இன்று(உகம் தேதி) நடக்கிறது.

இதில், பயிர் ஊக்கிகள், நுண்ணூட்டக் கலவைகள், புதிய ரகங்களின் விதைகள், பூச்சி நோய் குறித்து விளக்கம் அளிக்கப்பட உள்ளது.

விவசாயிகள், முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## மானவாரி நிலங்களில் உழவு பணி தீவிரம்

கிருஷ்ணராயபுரம்: கிருஷ்ணராயபுரம் யூனியன் உட்பட்ட பகுதியில் ஆடிப்பட்ட விதைப்பிற்கு ஆரம்ப பணிகளான உழவு பணியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் யூனியன் உட்பட்ட பகுதிகளான புணவாசிபட்டி, வயலூர், வேங்காம்பட்டி, சிவாயம், பஞ்சப்பட்டி, சேங்கல் மாயனூர் ஆகிய பகுதிகளில், கடந்த சில நாட்களாக பருவ மழை பெய்தது.

இதன் மூலம் மானவாரி சாகுபடியான எள், துவரை, கறுப்புசோளம் ஆகிய பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. அதற்கான ஆரம்ப பணிகளான மண்

பதப்படுத்துவற்காக விவசாயிகள் தற்போது உழவு பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். மேலும், ஆடி பட்டம் விதைத்தால் விளைச்சல் நன்றாக வரும் என நம்பிக்கையில், விவசாயிகள் விதைகள் விதைக்கும் பணியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**சங்ககிரியில் இடியுடன் கூடிய சூறாவளி மழை**

சங்ககிரி: சங்ககிரியில், நேற்று மாலை திடீரென இடியுடன் கூடிய, சூறாவளி மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். சங்ககிரியில், ஒரு மாதமாக மழை இல்லாமல் வானம் பார்த்த பூமியாய் இருந்து வந்தது. இந்நிலையில் நேற்று மாலை, 6 மணிக்கு திடீரென மேக மூட்டத்துடன் சூறாவளி காற்று வீசத்தொடங்கியது. சற்று நேரத்தில் பெய்யத்தொடங்கிய மழை, ஒரு மணி நேரம் கொட்டி தீர்த்தது. அதனால் சாலையில் மழை நீர் ஆறாக ஓடியது. மேலும் விவசாய கிணறு, குட்டைகள் நிரம்பியது. விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**தென்னங்கன்று வழங்கும் விழா**

பரமக்குடி: பரமக்குடி அருகே நயினார்கோவில் ஒன்றியம் பகைவென்றி கிராமத்தில்
மரக்கன்றுகள் வழங்கும் விழா நடந்தது.ஓய்வு பெற்ற ஆசிரியர் செல்வராஜ் தலைமை வகித்தார். யாதவர் சங்க தலைவர் சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார். பகைவென்றி கிராமத்தில் மரம் நடுவதை ஊக்குவிக்கும் விதமாக அக்கிராமத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 2 தென்னங் கன்றுகளை ஊராட்சி தலைவர் பழனிச்சாமி வழங்கினார்.

## சொட்டுநீர் பாசன பராமரிப்பு முறை விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்பு

சிவகங்கை: சிவகங்கையில் விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசன பராமரிப்பு முறை குறித்த பயிற்சி வகுப்பு நடந்தது.
ஒன்றியக்குழு தலைவர் சந்திரன் தலைமை வகித்தார்.

விவசாயிகளுக்கு சிக்கனமான நீர் பாசனத்தின் அவசியம் குறித்தும், இஸ்ரேலில் பயன்படுத்தப்படும் விவசாய தொழில்நுட்பங்கள் குறித்து ஒக்கூர் கிருஷ்ணன் விளக்கினார். விவசாய ஆராய்ச்சி மைய பேராசிரியர் செந்தில் குமரன், விவசாயத்துறை உதவி இயக்குனர் தனபாலன், விவசாய அலுவலர் தங்கபாண்டியன் மற்றும் பெண்கள். விவசாயிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

முன்னதாக, மோட்டார் பம்ப்செட்டில் இருந்து வரும் தண்ணீருடன் குறிப்பிட்ட அளவு உரம் மற்றும் பூச்சி மருந்துகளை கலந்து, சிறிய துளையிட்ட டியூப்கள் மூலமாக செடிகளின் வேர்களுக்கு மட்டும் செல்லும் சொட்டு நீர் பாசன மோட்டார் கருவி மூலம் விவசாயிகளுக்கு சிக்கனமாக நீரை பயன்படுத்தி விவசாயம் செய்வது குறித்த செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது.

## காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் மழை: ஒகேனக்கல்லுக்கு நீர் வரத்து அதிகரிப்பு

ஒகேனக்கல்: காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருவதால், ஒகேனக்கல்லுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. சுற்றுலா பயணிகள் பாதுகாப்பு கருதி, ஆற்றில் பரிசல் இயக்க மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது. கர்நாடக மாநிலத்தில் உள்ள நீர்பிடிப்பு பகுதிகளில் பருவமழை தீவிரம் அடைந்துள்ளதால், அங்குள்ள கபினி மற்றும் கிருஷ்ண ராஜசாகர் உள்ளிட்ட அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. இதையடுத்து, அந்த அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் வினாடிக்கு, 8,900 கன அடியாக இருந்த நீர்வரத்து, நேற்று, 9,400 கனஅடியாக அதிகரித்தது. இதனால் சுற்றுலா பயணிகளின் நலன்கருதி, ஒகேனக்கல் காவிரி ஆற்றில் பரிசல் இயக்க மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஏப்ரல், மே மாதத்தில் 7 லட்சம் டன் பருப்பு இறக்குமதி



புதுடெல்லி : உள்நாட்டில் பருப்பு விலையை கட்டுப்படுத்த வெளிநாடுகளில் இருந்து பருப்பு வகைகளை மத்திய அரசு இறக்குமதி செய்கிறது. கடந்த ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் 7 லட்சத்து 5,477 டன் பருப்பு வகைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. பருப்பு உற்பத்தி வகைகளுக்கு ஏற்ப 17 மில்லியன் டன் முதல் 19.5 மில்லியன் டன் வரை உற்பத்தி செய்யப்படுகிறது.

ஆனால் நடப்பு நிதியாண்டின் பருப்பு தேவை 24.61 மில்லிமன் டன்களாக உள்ளது. எனவே பற்றாக்குறை இறக்குமதி மூலம் ஈடு செய்யப்படுகிறது. இது உள்நாட்டு சந்தையில் விலையை கட்டுக்குள் வைக்கவும் உதவுகிறது. பதுக்கல், ஊக வணிகம், கள்ளச்சந்தைகள்தான் பருப்பு விலை உயர்வுக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. இவற்றை கண்காணிக்க மத்திய அரசு பல்வேறு குழுக்களை நியமித்துள்ளது என மத்திய அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

## குவிண்டால் பருத்தி ரூ.6351க்கு ஏலம்



கும்பகோணம் : தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அருகேயுள்ள கொட்டையூர் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று பருத்தி மறைமுக ஏலம் நடைபெற்றது. இதில் 964 விவசாயிகள் சுமார் 1670 குவிண்டால் பருத்தியை கொண்டு வந்தனர். வியாபாரிகள், ஏலத்தில் கலந்து கொண்டனர். இதில் அதிகபட்சமாக குவிண்டால் ரூ.6351க்கும், குறைந்தபட்சமாக ரூ.4600க்கும், சராசரியாக ஒரு குவிண்டால் ரூ.6000க்கும் ஏலம் போனது.

## இயந்திர முறையில் நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு மானியம்

மேல்மலையனூர், :மேல்மலையனூர் வட்டாரத்திற்கு 63000 மெட்ரிக்டன்கள் உற்பத்தி இலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

சாதாரண முறையில் நெல் சாகுபடி செய்வதைவிட இயந்திரமுறையில் நெல் நடவு சாகுபடி செய்வதால் இடுபொருள் செலவு, சாகுபடி செலவு குறைவதுடன் மகசூலும் 20%க்கு மேல் கூடுதலாக கிடைக்கிறது. எனவே தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நெல்மானியமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.5000 மானியம் வழங்கப்படுகிறது. மேல்மலையனூர் வட்டாரத்தில் நெல் இயந்திர நடவு சாகுபடிக்கு 750 ஹெக்டேர் இலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மேல்மலையனூர் வட்டாரத்திலுள்ள நெல் இயந்திர முறையில் நடவு சாகுபடி செய்யும் விவசாயிகள் இம்மானியத்தினை பெற தங்கள் வயலில் இயந்திரம் மூலம் நடவு செய்யப்படும். பாஸ் போட்டோ, சிட்டா, அடங்கல், ஆதார் எண் மற்றும் வங்கி கணக்கு எண் ஆகிய விவரங்களுடன் தங்கள் பகுதியில் உள்ள உதவி வேளாண்மை அலுவலர்களான ரகுபதி 94423 96251, சக்திவேல் 94458 90715, வெங்கடேசன் 97915 71163, தமிழ்மணி 90474 32137 ஆகியோரை தொடர்பு கொண்டு பயன்பெற கேட்டுக் கொள்வதுடன் மேலும் கூடுதல் விவரங்கள் பெற மேல்மலையனூர் வேளாண்மை விரிவாக்க மையத்தினை அணுக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## சுற்றுச்சூழல் பாதிக்காமல் இயற்கை வேளாண்மை சாகுபடியில் நோய்கள் கட்டுப்படுத்த முடியும்

விழுப்புரம், : இயற்கை வேளாண்மை சாகுபடி முறையில் விவசாயிகள் ஈடுபட்டால் இயற்கை சுற்றுச்சூழல் பாதிக்காமல், பூச்சி, நோய்கள் கட்டுப்படுத்தி பயிர்களை பாதுகாத்து சாகுபடி செய்ய முடியும் என வேளாண்மைத் துறை தகவல் தெரிவித்துள்ளது.விழுப்புரம் மாவட்ட வேளாண்மை துறை வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: மக்கள் தொகையின் உணவு தேவையை ஈடு செய்வதற்கு குறைந்த நிலப்பரப்பில் உயர் விளைச்சல் ரகம் மற்றும் வீரிய ஒட்டு ரகங்களை பயிர்கள் சாகுபடி செய்ய வேண்டிய கட்டாயத்தில் விவசாயிகள் இருப்பதால், தாங்கள் பயிர்கள் பூச்சி மற்றும் நோய்களில் இருந்து பாதுகாப்பதற்கு வீரியமிக்க ரசாயன பூச்சி கொல்லி மருந்துகளை அதிகமாக பயன்படுத்த வேண்டிய நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இப்படி ரசாயன பூச்சி கொல்லி மருந்துகள் பயன்படுத்தப்படுவதால் சுற்றுச்சூழல் மாசு, பூச்சிக்கொல்லி மருந்து பயன்பாட்டால் உணவு தானியத்தில் நஞ்சு தங்கும் அபாயம், இயற்கையில் நமக்கும் நன்மை செய்யும் பூச்சிகள் அழிப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மனிதர்களுக்கு அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே ரசாயன மருந்து பயன்படுத்தி விவசாயம் செய்வதை விவசாயிகள் தவிர்த்து விட்டு, எந்த பாதிப்பும் இல்லாத இயற்கை விவசாயத்தை பயன்படுத்த வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இதற்கான செய்தி தொகுப்பை வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார், வேளாண்மை அலுவலர்கள் ஹரிகிருஷ்ணன், ஆரோக்கியராஜ் ஆகியோர் செய்திருந்தனர்.

உயிரியல் காரணங்கள்

தமிழகத்தில் உள்ள 13 உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்படும் உயிரியல் காரணங்கள் 1, டிரைக்கோடெர்மா விரிடி, இதனால் பயிர்கள் வேர்அழுகல், தண்டு அழுகல், வாடல் நோய்கள் பட்டுப்படுத்த முடியும். 2 சூடோமோனாஸ் புளோரசன்ஸ், இதனால் பயிர்களுக்கு நோய் உண்டாக்கும் பாக்டீரியாக்கள் குறையும். 3 என்பிவி வைரஸ் கரைசல், இதனால் பருத்து, மணிலா மற்றும் பயிறுவகைகளில் ஏற்படும் 22 க்கும் மேற்பட்ட பூ, காய்ப்புழு நோய்களை கட்டுப்படுத்தப்படும். 4 டிரைக்கோகிராமா கைலோனிஸ், இதனால் கரும்பு பயிரை தாக்கும் பல்வேறு நோய்கள் கட்டுப்படுத்தப்படும்.

## ஜலகண்டாபுரம் கூட்டுறவு சங்கத்தில் 40.5 டன் தேங்காய் பருப்பு ரூ.21 லட்சத்திற்கு ஏலம்

ஜலகண்டாபுரம், : ஜலகண்டாபுரத்தில் உள்ள வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று நடந்த ஏலத்தில் 40.5 டன் தேங்காய் பருப்பு ரூ.21 லட்சத்திற்கு விற்பனையானது. சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரத்தில் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கொங்கணாபுரம் கிளை சேவை மையம் செயல்பட்டு வருகிறது. இங்கு, நேற்று நடைபெற்ற ஏலத்தில் ஜலகண்டாபுரம், நங்கவள்ளி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான சூரப்பள்ளி, ஆவடத்தூர், சின்னசோரகை, பெரிய சோரகை, பனிக்கனூர், தோரமங்கலம், கரிக்காப்பட்டி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 850 மூட்டைகளில் 40,500 கிலோ தேங்காய் பருப்புகளை விற்பனைக்காக கொண்டு வந்தனர். தேங்காய் பருப்பு கிலோ ரூ.45 முதல் ரூ.50.25 வரையிலும் ஏலம் போனது. இதன் மூலம் ஒரேநாளில் ரூ.21 லட்சம் வர்த்தகம் நடைபெற்றது.

## கால்நடை மருத்துவமனையில் நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி

நாமக்கல் : நாமக்கல் கால்நடை மருத்துவமனை வளாகத்தில், கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையத்தில் பண்ணையாளர்களுக்கான நாட்டுக்கோழி வளர்ப்பில் மூலிகை மருத்துவத்தின் முக்கியத்துவம் குறித்த ஒரு நாள் பயிற்சி வகுப்பு வரும் 27ம் தேதி மதியம் 2 மணிக்கு நடக்கிறது. இதில் சுற்று வட்டார பண்ணையாளர்கள் மற்றும் விவசாயிகள் இப்பயிற்சியில் கலந்து கொண்டு கோழிகளுக்கு ஏற்படும் பாதிப்புகள், வளர்ப்பு முறை, பராமரித்தல் உள்ளிட்ட பயிற்சி முறைகள் குறித்து விளக்கங்களை கேட்டு அறிந்து கொள்ளலாம்.

மேலும் கோடை காலம், மழைக்காலங்களில் கோழிகள் பாதுகாக்க வேண்டிய அம்மசங்கள் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. எனவே இந்த பயிற்சியில் கோழிப்பண்ணையாளர்கள் மற்றும் விவசாயிகள் திராளக வந்து கலந்து கொள்ளலாம் என மைய தலைவர் கோபாலகிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## சின்னாளபட்டி அருகே கம்பு அறுவடையில் விவசாயிகள் தீவிரம்

செம்பட்டி, : சின்னாளபட்டி அருகே கம்பு தானியத்தை அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.சின்னாளபட்டி அருகே கலிக்கம்பட்டி, செட்டியபட்டி, மற்றும் வெள்ளோடு, கல்லுப்பட்டி, யாகப்பன்பட்டி உட்பட பல கிராமங்களில் நிலத்தடி நீர் ஆதாரம் குறைந்து வருகிறது. விவசாயிகள் கடந்த 10 ஆண்டுகளாக கம்பு, கேழ்வரகு, சோளம் பயிரிடுவதை தவிர்த்து வந்தனர். குறைந்த நீரைக்கொண்டு பயிரிடக்கூடிய மக்காச்சோளத்தை அதிகளவில் சாகுபடி செய்து வந்தனர். தொடர்ந்து மக்காச்சோளத்தைப் பயிரிட்டு வந்த நிலங்களில், தாமிரசத்துச் குறைவு ஏற்படுவதால், சில நிலங்களில் மக்காச்சோள பயிர் சரிவர விளையாமல் பாதியிலேயே கருகி வந்தன.

தற்போது மீண்டும் இப்பகுதிகளில் உள்ள விவசாயிகள் கம்பு பயிரிட ஆர்வம் காட்டியதோடு கோ- 9, ஐ.சி.எம்.வி.221 ரக கம்புகளை பயிரிட்டனர். விதை நட்ட 75வது நாளில் அறுவடை செய்யலாம் என்பதால் இப்பகுதியில் மீண்டும் கம்பு பயிரிடத் தொடங்கிவிட்டனர். ஒருசிலர் கம்பு பயிரை அறுவடை செய்து சாலை ஓரங்களில் உலர வைத்து, அவற்றை தரம்பிரித்து விற்பனைக்கு அனுப்பி

வைக்கின்றனர்.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், “10 ஆண்டுகளாக தமிழகத்தின் பல பகுதிகளில் பயிரிடப்படாத பயிர் என்பதால், கம்பு பயிரின் தேவை அதிகரித்து வருகிறது. குழந்தைகளுக்கும், முதியோருக்கும் அதிகச் சத்து தரும் பயிர் என்பதால், பொதுமக்கள் இதை வாங்குவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அண்மைக்காலமாக கம்பு தானியத்தைக் கொண்டு பல்வேறு தின்பண்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

குழந்தைகளுக்கும், முடியோருக்கும் சத்து நிறைந்த உணவாக கம்பு தானியம் உள்ளது. பொதுமக்களிடையே கம்பு தானியத்தைப் பற்றி ஓரளவு விழிப்புணர்வும் ஏற்பட்டுள்ளது.சின்னாளபட்டி பகுதியில் நீர் ஆதாரம் இல்லாததால் இப்பகுதி விவசாயிகள் கம்பு பயிரிடுவதைத் தவிர்த்து வந்தனர். மக்காச்சோள பயிர் விதைகள் மற்றும் இதர பயிர் விதைகளை கொடுக்கும் வேளாண்துறை அதிகாரிகள், கம்பு பயிர் விதை கொடுப்பதை தவிர்த்து வருகின்றனர்.

கம்பு பயிர் பயிரிட்ட நிலங்களில் குருவி, மைனா, காகம், புறா, போன்ற பறவைகள் வரும்போது அவற்றின் எச்சங்கள் நிலத்திற்கு உரமாக இருந்து வந்தன. தற்போது பறவைகளின் வரத்துக் குறைவால் இயற்கை உரங்கள் நிலத்திற்கு கிடைப்பது குறைந்து,செயற்கை உரங்களை நிலத்திற்கு வாங்கிப் போட வேண்டிய அவல நிலையில் உள்ளோம். வேளாண் துறை அதிகாரிகள் கம்பு பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் கம்பு விதைகளை வழங்க வேண்டும்” என்றார்.

## மகசூல் பாதிப்பதால் ஆமணக்கில் பூச்சிகளை ஒழிக்க அக்கறை காட்டுங்கள் வேளாண்துறை ஆலோசனை

ராமநாதபுரம், : ஆமணக்கில் பூச்சிகளை ஒழிக்க விவசாயிகள் அக்கறை காட்டுங்கள் என வேளாண் துறையினர் தெரிவித்துள்ளனர்.தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் எண்ணெய் வித்துகளில் நிலக்கடலை, எள், ஆமணக்கு, சூரியகாந்தி ஆகியவை முக்கிய பயிர்களாக விளங்குகின்றன. தமிழகத்தில் சுமார் 5.02 லட்சம் ஹெக்டேர்களில் எண்ணெய் வித்து பயிர்கள் மானாவாரியாகவும், இறவையிலும் சாகுபடி செய்யப்படுகின்றன. எண்ணெய் வித்து பயிர்களில் ஆமணக்கு அதிகளவில் சாகுபடி செய்யப்படுபவை ஆகும்.

ஆமணக்கு மானாவாரியில் ஏப்ரல்-மே, ஜூன்-ஜூலை, ஜூலை-ஆகஸ்டு பட்டங்கள் மிகவும் உகந்தவை. ஆமணக்கு பயிரிட பாத்தி அமைத்தல், உரமிடுதல், நுண் ஊட்டமிடுதல், ஊட்டச்சத்து கலவை தெளிப்பு, விதை அளவு, விதை நேர்த்தி, களை கட்டுப்பாடு, பாசனம் ஆகியவற்றை வேளாண் துறையினரிடம் ஆலோசனை பெற்று அதன்படி கடைபிடித்தால் நல்ல விளைச்சல் பெறலாம்.அதுபோல், பூச்சி மேலாண்மையில் விவசாயிகள் அதிக அக்கறை காட்ட வேண்டும் என வேளாண்துறையினர் வலியுறுத்துகின்றனர்.

இதுகுறித்து அவர்கள் கூறியதாவது: ‘‘கோடை மழைக்கு முன் வரப்புகளிலும், நிழலான இடங்களிலும், மண்ணில் புதைந்துள்ள கூட்டுப்புழுக்களை உழவு செய்து வெளிக்கொண்டு வந்து அழிக்க வேண்டும். விளக்குப் பொறி அல்லது தீப்பந்தம் வைத்து தாய் அந்திப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்க வேண்டும். பயிர்களில் இடப்பட்டுள்ள முட்டைகளை சேகரித்து அழிக்க வேண்டும். தாக்கப்பட்ட வயல்களைச் சுற்றி 30 சென்டி மீட்டர் ஆழம் மற்றும் 25 சென்டி மீட்டர் அகலத்தில் செங்குத்தாக குழிகள் அமைத்து புழுக்கள் பாதிக்கப்பட்ட வயல்களில் இருந்து பரவுவதை தடுக்க வேண்டும்.

ஹெக்டேருக்கு 25 கிலோ என்ற அளவில் பாசலோன் 4%, கார்பாரில் 10%, பெனிட்ரோதியான் 2% ஆகியவை கலந்து தெளிக்க வேண்டும். 1 ஹெக்டேருக்கு சூடோமோனாஸ் ஃப்புளூரசன்ஸ் 2.5 கிலோவுடன், 50 கிலோ மக்கிய தொழுவுரத்தை கலந்து தெளிக்க வேண்டும். மேலும், நோய் தென்படும் இடங்களில் கார்பன்டாசிம் லிட்டருக்கு 1 கிராம் என்ற அளவில் கலந்து தெளித்தால் பூச்சிகளின் தாக்குதல் இருக்காது. இதுதொடர்பான கூடுதல் தகவல்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களையோ அல்லது வேளாண் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்’’ இவ்வாறு தெரிவித்தனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### நீலகிரி மாவட்ட விவசாயிகள் சந்தை நிலவரம் குறித்து அறிந்து கொள்ள புதிய மொபைல் ஆப் அறிமுகம்

ஊட்டி,

நீலகிரி மாவட்ட விவசாயிகள் சந்தை நிலவரம் குறித்து அறிந்து கொள்ள புதிய 'மொபைல் ஆப்' அறிமுகம் செய்யப்பட்டு உள்ளதாக வேளாண் வணிக துணை இயக்குனர் வீரமணி தெரிவித்து உள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டு உள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:–

'மொபைல் ஆப்' அறிமுகம்

இந்திய விவசாயிகளின் நலன் கருதி பயிர் சாகுபடி குறித்தான நவீன தொழில்நுட்ப கருத்துகளை தெரிந்து கொள்ள 'கிசான் சுவிதா' என்ற புதிய 'மொபைல் ஆப்' அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது. இதனை ஸ்மார்ட் போன்களில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். தற்போது ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் அறிந்து கொள்ளும் வசதி உள்ளது.

விரைவில் அரசு வேளாண்மை துறை சார்பில் தமிழில் மொழி மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த 'மொபைல் ஆப்' மூலம் தினசரி மற்றும் எதிர்வரும் 5 நாட்களுக்கான பருவநிலை மாற்றம், புகைப்பட விளக்கத்துடன் பயிர்பாதுகாப்பு மேலாண்மை முறைகள், வேளாண் பொருட்களின் தினசரி சந்தை நிலவரம், மேலும் உள்ளூர், பிற மாவட்டம், பிற மாநிலங்களின் விலை நிலவரம் ஆகியவற்றை அறிந்து கொள்ள முடியும்.

தொழில்நுட்ப வல்லுனர்கள்

விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்து ஆகியவற்றை விற்பனை செய்பவர்களின் முகவரி உள்ளிட்ட விவரங்களையும் இதன் மூலம் அறிந்து கொள்ள முடிவதோடு, தொழில்நுட்ப வல்லுனர்களையும் தொடர்பு கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டு உள்ளது. எனவே விவசாயிகள் தாங்கள் இருந்த இடத்தில் இருந்து காலநிலை மாற்றம், சந்தை விலை நிலவரம், பயிர்பாதுகாப்பு, தொழில்நுட்பங்கள், வேளாண் ஆலோசனை ஆகியவற்றை இந்த புதிய 'மொபைல் ஆப்' மூலம் பெற்று கொள்ள முடியும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**ராதாபுரம் பகுதியில் வாழைத்தார் விலை உயர்வு; விவசாயிகள் மகிழ்ச்சி**



ராதாபுரம்,

நெல்லை மாவட்டம் ராதாபும், பணகுடி, நாங்குநேரி, வள்ளியூர், களக்காடு, செட்டிக்குளம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் வாழை பயிரிட்டுள்ளனர். இந்த பகுதியில் வாழைத்தார் விலை கடுமையாக உயர்ந்துள்ளன. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடந்த மாதம்

ரூ.1,500 க்கு விற்பனை செய்யப்பட்ட செவ்வாழை வாழைத்தார் தற்போது ரூ.2 ஆயிரத்து 500 முதல் ரூ.2 ஆயிரத்து 700 வரை விற்பனை செய்யப்படுகிறது.

ரூ.300 க்கு விற்பனை செய்யப்பட்ட ஏத்தன் வாழைத்தார் ரூ.750 முதல் ரூ.800 வரை விற்பனை செய்யப்படுகிறது. நாட்டு வாழைத்தார் ஒன்று ரூ.300 முதல் ரூ.350 வரை விற்பனை செய்யப்படுகிறது. வாழைக்காய் வரத்து குறைவாக இருப்பதால் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.